செ.வெ.எண்.58 நாள்.27.08.2020

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரி ஒன்றியம் சேதுகுவையத்தான் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

---------

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரி ஒன்றியம் சேதுகுவையத்தான் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்த கூட்டம் இன்று (27.08.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு மகளிர் சுய உதவி குழு கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடவும், பொருளாதார ரீதியாக உயர்த்தி தன்னம்பிகையை வளர்த்திடவும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளது. ஆழ்வார்திருநகரி ஒன்றியத்தில் சேதுகுவையத்தான் ஊராட்சி அளவிளான கூட்டமைப்பு பத்து ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டு இன்றும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 37 மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஒன்றினைந்து கூட்டமைப்பாக சிறப்பாக செயல்படுவது மகிழ்ச்சி குறியதாகும். ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழுக்களும் ஒவ்வொரு வீதமான பொருட்களை தயார் செய்து சந்தைப்படுத்தி வருகின்றனர். ரூபாய் ஒரு லட்சம் கடன் பெற்று தொடங்கி இன்று ரூபாய் 15 இலட்சம் வரை கடனுதவி பெற்று தொழில் செய்து சேமிப்பு நிதியையும் உருவாக்கி முறையாக கடனை திருப்பி செலுத்தி வருவது பாராட்டுக் குறியதாகும். கோவிட் -19 காலத்தில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு உதவிடும் வகையில் சிறப்பு கடனுதவிகள் வழங்கப்படுகிறது. மேலும் ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு வேலைவாய்பின்றி இருப்பவர்களை கண்டறிந்து திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து கடனுதவி வழங்குதல். வெளி மாநிலங்களில் இருந்து சொந்த ஊர்களுக்கு திரும்பியவர்களை கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட தொழில் செய்திட கடனுதவி வழங்குதல் உள்ளிட்டவைகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த பகுதியில் 21 நபர்களுக்கு ரூ.4 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவி குழுவினர் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இன்னும் மேம்படுத்தி சந்தைப்படுத்தும் போது கூடுதல் இலாபம் இடைக்கும். மேலும் புதிய தொழில் நுட்பங்களையும் கற்று அவைகளையும் பயன்படுத்திட வேண்டும். உதாரணமாக மண்பாண்ட குடிநீர் ஜக் செய்யும் போது அவைகளை கலர் பாலீஸ் செய்து கூடுதல் விலைக்கு விற்கலாம். பால் உற்பத்தி செய்யும் குழுக்கள் நெய், பால்கோவா உள்ளிட்ட மதிப்பு கூட்டு பொருட்களை தயார் செய்து விற்கும் போது கூடுதல் வருமானம் பெறலாம். இது போன்ற தொழில் நுட்பங்களையும் கண்டறிந்து பயன்படுத்திட வேண்டும். நீங்கள் இன்னும் கூடுதலாக கடனுதவிகளை பெற்று மேலும் நல்ல பல தொழில்களை செய்து உங்களது பொருளாதாரத்தை வளர்த்து கொள்ள வேண்டும். உங்களை போன்ற குழுக்களின் பொருளாதாரம் உயரும் போது நாட்டின் பொருளாதாரம் உயரும். உங்களுக்கு தேவையான உதவிகளை செய்ய அரசு தயராக

உள்ளது. அரசின் திட்டங்களை மகளிர் சுய உதவிகுழுக்கள் முழுமையாக பயன்படுத்திகொள்ள வேண்டுமென பேசினார்.

முன்னதாக மகளிர் சுய உதவி குழுக்களின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மகளிர் கூட்டமைப்பின் மூலம் கடன்பெற்று நடத்தி வரும் மளிகை கடை, ரெடிமேட் உடை தயாரித்தல், மண்பாண்டம் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திருமதி.ரேவதி, ஏரல் வட்டாட்சியர் திருமதி.அற்புதமணி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் திருமதி.பிரேமா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கருப்பசாமி, புத்தாக்கத் திட்ட வட்டார மேலாளர் திரு.பாலமுருகன், வட்டார கணக்கர் திருமதி.சுபி சித்ரா, சேதுகுவையத்தான் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சுதா சீனிவாசன், துணைத்தலைவர் திரு.வைகைகரையான் மற்றும் சுய உதவிக்குழு மகளிர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.